தினமணி

## ஆமூரில் தீவிர பயறு வகை சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி

First Published : 12 Feb 2012 01:56:50 PM IST

திருச்சி, பிப். 11: வேளாண்மைத் துறை சார்பில், தீவிர பயறு வகை சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி முகாம் திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், ஆமூர் கிராமத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

ஆமூர் ஊராட்சித் தலைவர் பிரகாசம் தலைமை வகித்தார். ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள் பாலசுப்பிரமணியன், கணேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திருச்சி வேளாண் துணை இயக்குநர் (மத்தியத் திட்டம்) சந்திரசேகர் பேசியது:

பயறு வகை உற்பத்தியை ஊக்குவிக்க விதைகளுக்கு விதை கிராமத் திட்டத்தின் கீழ் 50 சத மானியத்தில் விதைகள் வழங்கப்படுகின்றன.

தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கத்தின் (பயறு வகைகள்) கீழ் உழவுத் தொழில் செய்ய சுழல் கலப்பை, தெளிப்பு நீர் பாசனக் கருவிகள், ரைசோபியம், உயிர் உரம், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்புக்கு மருந்துகள், களைக்கொல்லி மருந்துகள், விதை உற்பத்தி செய்ய மானியம் ஆகியவை வழங்கப்படுகின்றன.

மேலும் சிறு, குறு விவசாயிகளுக்கு நுண்ணீர் பாசனக் கருவிகள், மழைதூவான், தெளிப்பு நீர் பாசனக் கருவிகளும் மானியத்தில் வழங்கப்படுகின்றன என்றார் அவர்.

பயறு வகை சாகுபடித் தொழில்நுட்பங்கள்,வேளாண் திட்டப் பணிகள், அரசு மானியங்கள், நன்செய் தரிசில் பயறு வகைச் சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது. பயறு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு நுண்ணூட்டச் சத்துகள் வழங்கப்பட்டன.

ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் ராஜா, கலைச்செல்வன், சுரேஷ்குமார் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

முசிறி வட்டார வேளாண் உதவி இயக்குநர் ராஜாமணி வரவேற்றார். துணை வேளாண் அலுவலர் கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறினார்.

## விவசாயிகளுக்கு திறன் வளர்த்தல் பயிற்சி

First Published : 12 Feb 2012 02:03:20 PM IST

கரூர், பிப். 11: கிருஷ்ணராயபுரம் வட்டம், வீரராக்கியம் ஊராட்சி அலுவலகத்தில் விவசாயிகளுக்கு திறன் வளர்த்தல் பயிற்சி அண்மையில் நடைபெற்றது.

பயிற்சிக்கு வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக துணை இயக்குநர் ரவி தலைமை வகித்தார்.

பயிற்சியில் வீரராக்கியம் கிராமத்தைச் சேர்ந்த 20 நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளைத் தேர்ந்தெடுத்து, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் கீழ் நெல் விளைபொருள் குழுக்கள் அமைக்கப்பட்டது.

வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை அலுவலர் ஷோபா, வேளாண் வணிகத் துறையின் மூலம் செயல்படுத்தும் திட்டங்கள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விற்பனை செய்வதன் நன்மைகளை விளக்கினார்.

கிருஷ்ணராயபுரம் வட்டார தோட்டக்கலை அலுவலர் கலா, தோட்டக்கலைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் மானிய திட்டங்கள் குறித்து பேசினார். விவசாயிகளுக்கு மானிய விலையில் வெண்டை விதை வழங்கப்பட்டது. இந்தப் பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் வி.பி. சுப்பிரமணியன், கோகுல் மற்றும் ஞானசேகர் ஆகியோர் செய்திருந்தனர்.

## விவசாயிகளுக்கு நெல்விதை உற்பத்திப் பயிற்சி

First Published : 12 Feb 2012 06:33:13 PM IST

சிதம்பரம், பிப். 11: சிதம்பரத்தை அடுத்த பரங்கிப்பேட்டை வட்டார வேளாண்மைத் துறை சார்பில் தில்லைவிடங்கன் கிராமத்தில் விதை கிராமத் திட்டத்தின் கீழ், நெல் விதை உற்பத்திக் குறித்த விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் சனிக்கிழமை நடைபெற்றது.

வேளாண் உதவி இயக்குநர் வி.மதிவாணன், பயிற்சியை தொடங்கி வைத்து வேளாண் துறை திட்டங்கள் குறித்தும், நெல் விதை உற்பத்திக்கான தொழில்நுட்பங்கள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

உதவி வேளாண் அலுவலர் வி.செல்லதுரை மண் மாதிரி எடுத்தல், விதை நேர்த்தியின் அவசியம், விதைச்சான்று நடைமுறை குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

முன்னோடி விவசாயிகள் ஆர்.கலையரசன், ஆர்.மதிக்குமார் ஆகியோர் கருத்துரையாற்றினர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் கே.தாமரைக்கனி, பிரான்ஸிஸ் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

**'வண்ண மீன்களை உற்பத்தி செய்து கூடுதல் வருமானம் பெறலாம்'**

First Published : 12 Feb 2012 06:30:39 PM IST

சிதம்பரம், பிப். 11: மீன்பிடித் தொழிலையே நம்பி உள்ள மீனவர்கள், தற்போதுள்ள தொழில் போட்டிகளை சமாளிக்க, புதிய தொழில்நுட்பத்துடனான வண்ண மீன்களை உற்பத்தி செய்வதன் மூலம் அவர்கள் கூடுதல் வருமானம் பெறலாம் என தேசிய மீன் அபிவிருத்தி வாரிய முதன்மை இயக்குநர் பி.கிருஷ்ணய்யா தெரிவித்தார்.

இந்தியாவிலேயே முதன்முதலாக கடலூர் மாவட்டம் பரங்கிப்பேட்டையில் உள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழக கடல்வாழ் உயிரின உயராய்வு மையத்தில் சினை மீன் வங்கி திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

துணைவேந்தர் எம்.ராமநாதன் தலைமை வகித்து சினைமீன் வங்கி வளாகத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். தேசிய மீன் அபிவிருத்தி வாரிய முதன்மை இயக்குநர் பி.கிருஷ்ணய்யா சினை மீன் வங்கியை தொடங்கி வைத்தார். கடலூர் மாவட்ட ஆட்சியர் ராஜேந்திர ரத்னூ முன்னிலை வகித்தார். கடல்வாழ் அறிவியல் புல முதல்வர் முனைவர் டி.பாலசுப்பிரமணியன் வரவேற்றார். மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை இயக்குநர் ஜே.ஆர்.பட், பதிவாளர் எம்.ரத்தினசபாபதி, சிண்டிகேட் உறுப்பினர் வழக்குரைஞர் ஏ.சம்பந்தம் உள்ளிட்டோர் விழாவில் பங்கேற்றனர். விழா ஏற்பாடுகளை உதவிப் பேராசிரியரும், மூத்த ஆராய்ச்சியாளருமான டி.டி.அஜீத்குமார் செய்திருந்தார்.

நிகழ்ச்சிக்கு பின்னர் தேசிய மீன் அபிவிருத்தி வாரிய முதன்மை இயக்குநர் பி.கிருஷ்ணய்யா செய்தியாளர்களிடையே தெரிவித்தது:

முதன்முதலாக கேரளத்தைச் சேர்ந்த காவில் என்ற அரசு நிறுவனம் தூய நீரில் வண்ணமீன்களை உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. தற்போது அண்ணாமலைப் பல்கலைக்கழக கடல்வாழ் உயிரின உயராய்வு மையம், கடல்நீரில் வண்ணமீன்கள் உற்பத்தி செய்யும் புதிய தொழில்நுட்பத்தை கண்டுபிடித்துள்ளது. இதன் மூலம் வண்ணமீன்களை உற்பத்தி செய்து மீனவர்கள் மாதம் ரூ.10 ஆயிரம் வரை வருமானம் பெறலாம்.

வண்ண மீன் தொழில்நுட்பத்திற்கு 100 சதவீத மானியமும், வண்ணமீன் வளர்ப்பதற்கு 50 சதவீத மானியமும், பொதுவான கட்டமைப்புக்கு 90 சதவீத மானியமும் தேசிய அபிவிருத்தி வாரியம் வழங்குகிறது என பி.கிருஷ்ணய்யா தெரிவித்தார்.

துணைவேந்தர் எம்.ராமநாதன் தெரிவித்தது: அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பல்வேறு துறைகளில் பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளது. எங்களது ஆராய்ச்சிகள் ஆய்வுக்கூடத்துடன் நின்றுவிடாமல் மக்களுக்கு பயனடையும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதல் கட்டமாக நெற்பயிருடன் கோழி மற்றும் மீன் வளர்க்கும் ஒருங்கிணைந்த நெற் பயிர் திட்டம் கடலூர், விழுப்புரம் உள்ள மாவட்டங்களில் விவசாயிகள் பயனடையும் வகையில் செயல்படுத்தி வருகிறது என தெரிவித்தார்.

**மேட்டூர் அணை நீர்மட்டம்: 83.39 அடி**

First Published : 12 Feb 2012 01:55:19 PM IST

தஞ்சாவூர், பிப். 11: மேட்டூர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை மாலை 83.39 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 778 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 2,005 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து காவிரியில் வினாடிக்கு 101 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. வெண்ணாறு, கல்லணைக் கால்வாய், கொள்ளிடத்தில் தண்ணீர் திறக்கப்படவில்லை.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**விடுபட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை எப்போது?**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 13,2012,01:39 IST

கருத்தை பதிவு செய்ய

கடலூர் :கடலூர் மாவட்டத்தில் "தானே' புயலால் பாதிக்கப்பட்டு விடுபட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை பட்டியல் தயார் நிலையில் உள்ளது. நிவாரணத் தொகை விரைந்து வழங்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

கடலூர் மாவட்டத்தில் "தானே' புயலால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு ஏற்றாற்போல் விவசாயிகளுக்கு முதல் கட்டமாக நிவாரணத் தொகை வழங்கப்பட்டு விட்டது.

நெல், தோட்டக்கலை பயிர் செய்த விவசாயிகளுக்கு ஒரு எக்டருக்கு 8,000 ரூபாய் வீதமும், 10 ஆயிரம் ரூபாய் வீதமும் வழங்கப்பட்டுள்ளது. சேதமடைந்த தென்னை, முந்திரி மரங்களுக்கு முதல்வர் பிரத்யேகமாக நிவாரண உதவிகளை அறிவித்துள்ளார்.
ஏற்கனவே முறையாக கணக்கெடுக்கப்படவில்லை எனவும், மீண்டும் விடுபட்ட நிலத்திற்கு கணக்கெடுப்பு நடத்தி நிவாரணத் தொகை வழங்க வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்தனர்.
அதன்படி பாதிக்கப்பட்ட விவசாயிகள் மனுவாக எழுதி வேளாண்மை அதிகாரிகளிடம் கொடுத்துள்ளனர். இந்த மனுவின் மீது விவசாரணை நடத்தி விடுபட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வருவாய்த் துறை பட்டியல் தயார் செய்துள்ளது.

சவுக்கு பயிருக்கு நிவாரணம்:
காற்றின் வேகத்தில் சவுக்கு பயிர் செய்தவர்களுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. துவக்க நேரத்தில் சவுக்கு நிவாரணம் அறிவிக்கப்படாமல் இருந்தது.
அதைத்தொடர்ந்து சிறப்பு அதிகாரி ககன்தீப்சிங்பேடி சவுக்கை தோப்புகள் அழிந்தது குறித்து அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்தார்.
அதனையேற்று, அரசு பாதிக்கப்பட்ட சவுக்கை மரங்களுக்கு எக்டர் ஒன்றுக்கு 7,000 ரூபாய் வீதம் நிவாரணத்தொகை அறிவித்தது.
ஏற்கனவே கணக்கெடுப்பு நடத்தாமல் விடுபட்ட பயிர்களில் சவுக்கையும் ஒன்று.
எனவே தற்போது விடுபட்டுள்ள விவசாயிகளுக்கு நிவாரணத்தொகை வழங்கும் போதே சவுக்கைக்கான நிவாரணத் தொகையும் சேர்த்து வழங்குவதற்காக கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தப் பட்டியல் வி.ஏ.ஓ.,வால் சரி பார்க்கப்பட்டு தயார் நிலையில் உள்ளன. இதற்கான நிவாரணத்தொகை விரைந்து வழங்க வேண்டும் என்பது விவசாயிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது. எனவே கலெக்டர் ராஜேந்திர ரத்னு விவசாயிகளுக்கு விரைந்து நிவாரணத்தொகை வழங்க நடவடிக்கை எடுத்தால்தான் அடுத்த கட்டமாக பயிர் செய்வது குறித்து விவசாயிகள் சிந்திப்பதற்கு வசதியாக இருக்கும்.

**எண்ணெய் பனை சாகுபடி விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 13,2012,01:50 IST

விருத்தாசலம் :விருத்தாசலம் வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் ஐசோபாம் எண்ணெய் பனை திட்டத்தின் கீழ் எண்ணெய் பனை சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு பயிற்சிக் கூட்டம் நடந்தது.

வேளாண்மை இணை இயக்குனர் ராதாகிருஷ்ணன் தலைமை தாங்கினார். வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் விஜயகுமார் வரவேற்றார்.

கூட்டத்தில் எண்ணெய் சாகுபடி குறித்தும், தொழில்நுட்ப ஆலோசனைகள் மற்றும் விற்பனை செய்வது குறித்தும் விவசாயிகளுக்கு விரிவாக விளக்கப்பட்டது.

உற்பத்தி அலுவலர் சாலமன் செல்வசேகர், மாவட்ட பொறுப்பாளர் சரவணகுமார், துணை வேளாண்மை அலுவலர் ஞானசேகரன், உதவி வேளாண்மை அலுவலர்கள் செல்லப்பன், மகேஸ்வரி, களப்பணியாளர் சிவக்குமார் உட்பட பலர் பங்கேற்றனர்.

**கால்நடை சிறப்பு முகாம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 13,2012,01:32 IST

மயிலம் :மயிலம் அடுத்த நெடி மோழியனூரில் கால்நடைகளுக்கான சிறப்பு முகாம் நடந்தது. திண்டிவனம் உதவி இயக்குனர் குருவையா தலைமை தாங்கினார். ஊராட்சி தலைவர்

உமாகோவிந்தராஜ் முன்னிலை வகித்தார். ஒன்றிய கவுன்சிலர் கண்ணன் வரவேற்றார். முகாமில் 600க்கும் மேற் பட்ட கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி, சினை பரிசோதனை, செயற்கை முறை கருவூட்டல் போன்ற மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது.

கால்நடை மருத்துவர்கள் நடராஜன், சசிகுமார், மந்தைகாப்பாளர் அங்கமுத்து, உதவியாளர்கள் கண்ணாயிரம், சக்திவேல் கலந்து கொண்டனர்.

**மஞ்சள் ஏலம் ரத்துவியாபாரிகள் ஏமாற்றம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 13,2012,04:36 IST

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கத்தில், ஏலத்துக்கு, விவசாயிகள் மஞ்சள் கொண்டு வராததால், வியாபாரிகள் ஏமாற்றத்துடன் சென்றனர்.
ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், வெள்ளிக்கிழமை பருத்தி ஏலமும், சனிக்கிழமை மஞ்சள் ஏலமும் நடந்து வருகிறது.தற்போது, மஞ்சள் விலை குறைந்துள்ளதால், இருப்பு வைத்துள்ள விவசாயிகள் மஞ்சளை ஏலத்துக்கு கொண்டு வரவில்லை. நேற்று முன்தினம், அதிகபட்சமாக, 10 மூட்டை மஞ்சள் மட்டுமே விற்பனைக்கு வந்ததால், மஞ்சள் ஏலம் நடக்கவில்லை. அதனால், பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்திருந்த மஞ்சள் வியாபாரிகள், ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்

**வாழப்பாடி பகுதியில் புளி அறுவடை துவக்கம் பதப்படுத்தும் பணியில் தொழிலாளர்கள்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 13,2012,04:05 IST

கருத்தை பதிவு செய்ய

வாழப்பாடி:வாழப்பாடி பகுதியில், புளி அறுவடை சீஸன் துவங்கியது. விவசாயிகள், மரத்தில் இருந்து புளியை உலுக்கி சேகரித்து, பதப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.சேலம், தர்மபுரி, விழுப்புரம் ஆகிய மாவட்டங்களை இணைக்கும் வகையில், பலநூறு சதுர மைல் பரப்பளவில், சின்ன கல்வராயன் மற்றும் பெரிய கல்வராயன் மலைப்பகுதி உள்ளது. சேலம் மாவட்ட எல்லையில், மணியார்குண்டம், பகுடுப்பட்டு, கலக்காம்பாடி, சூலாங்குறிச்சி, கரியகோயில், தேக்கம்பட்டு, மண்ணூர், மாமாஞ்சி மற்றும் தர்மபுரி மாவட்ட எல்லையில், சேலூர், வேலனூர், சிட்லிங், சித்தேரி, விழுப்புரம் மாவட்ட எல்லையில், வெள்ளிமலை உள்ளிட்ட நூற்றுக்கும் அதிகமான மலைக் கிராமங்கள் உள்ளன.இந்த மலைக் கிராமங்களில், விவசாயத்துக்கு பயன்படாத சரிவான நிலப்பகுதியில், நீண்ட கால பலன் தரும் புளியன் மரங்கள் நிறைந்து காணப்படுகின்றன.

அதுமட்டுமின்றி, அருநூற்றுமலை, சந்துமலை, நெய்யமலை மற்றும் நாமக்கல் மாவட்ட எல்லையில் அமைந்துள்ள ஜம்பூத்துமலைப் பகுதி கிராமங்களிலும், ஏராளமான புளியன் மரங்கள் உள்ளன.மேலும், வாழப்பாடி மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களிலும், பரவலாக புளியன் மரங்கள் உள்ளன. வாழப்பாடியை சுற்றியுள்ள மலைக்கிராமங்கள் உள்ளிட்ட இருநூற்றுக்கும் அதிகமான கிராமங்களில் இருந்து ஆண்டு தோறும், 1,000 டன் அளவுக்கு புளி விளைகிறது. விளையும் புளியை, உள்ளூர் வாரச்சந்தைகளில் விற்பனை செய்வது மட்டுமின்றி, சேலம், தர்மபுரி, நாமக்கல் மற்றும் விழுப்புரம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கு கொண்டு சென்று, விவசாயிகளும், வியாபாரிகளும் விற்பனை செய்கின்றனர்.கல்வராயன் மலை, நெய்யமலை,

சந்துமலை பகுதி கிராமங்களில் விளையும் புளியில், சமையலுக்கு ஏற்ற இனிப்பு கலந்த புளிப்பு சுவை நிறைந்து காணப்படுகிறது. அதனால், பல்வேறு பகுதி மக்களும், விரும்பி கொள்முதல் செய்து, சமையலுக்கு பயன்படுத்தி வருகின்றனர்.கடந்த ஆண்டு புளி விற்பனை எதிர்பார்த்த அளவுக்கு இல்லாததால், அறுவடை சீஸன் மாதங்களில் ஒரு கிலோ, 60 ரூபாய் முதல், 80 ரூபாய் வரை மட்டுமே விற்பனையானது. இந்தாண்டு புளி உற்பத்தி அதிகரித்துள்ள நிலையிலும், மக்களின் தேவை அதிகரித்துள்ளதால், புளி விலையும் உயரும் என, வியாபாரிகள் தெரிவித்தனர்.முதற்கட்டமாக அறுவடை செய்யப்பட்டுள்ள புளியை, ஒரு கிலோ, 90 ரூபாயில் இருந்து, 110 ரூபாய் வரை சில்லறை விலையில் வியாபாரிகள் விற்பனை செய்து வருகின்றனர். வரும் மாதங்களில், புளி மகசூல் அதிகரித்தால் விலை குறையும் என்று, வியாபாரிகள் தெரிவித்தனர்.

**சாமந்திப் பூ உற்பத்தி அமோகம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 13,2012,04:05 IST

கருத்தை பதிவு செய்ய

பனமரத்துப்பட்டி:மல்லூர் பகுதியில், குறுகிய காலத்தில் லாபம் தரும் சாமந்திப் பூ பயிரிட, விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். தற்போது, அறுவடை செய்யும் பணி நடந்து வருகிறது.பனமரத்துப்பட்டி வட்டாரத்தில், கம்மாளப்பட்டி, தும்பல்பட்டி, ஜல்லூத்துப்பட்டி, குரால்நத்தம், குள்ளம்பட்டி, திப்பம்பட்டி, காளியாகோவில் புதூர், அடிக்கரை, பெரமனூர், நல்லியாம்புதூர் உள்ளிட்ட இடங்களில் அரளிப் பூ, குண்டு மல்லி, சம்பங்கி உள்ளிட்ட பூ வகைகள் அதிக அளவில் உற்பத்தியாகிறது.

அரளிப் பூ, குண்டுமல்லி பயிரிட்டால், 10 ஆண்டுகள் வரை செடியில் பூ உற்பத்தி இருக்கும். அதனால், விவசாயிகளுக்கு நீண்ட காலம் வரை கணிசமான வருவாய் கிடைப்பதால், பூக்கள் பயிரிடுவதில், விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.அதேபோல், மல்லூரை சுற்றியுள்ள, வாழகுட்டப்பட்டி, ஏர்வாடி, மூக்குத்திபாளையம், அம்மாபாளையம் உள்ளிட்ட கிராமங்களில், குண்டுமல்லி பூ பயிரிடப்பட்டுள்ளது. இந்நிலையில், தற்போது குறுகிய காலத்தில் பயன் தரக்கூடிய, சாமந்திப் பூ பயிரிடுவதில், மல்லூர் பகுதி விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.மல்லூர், வாழகுட்டப்பட்டி, ஆலம்பாளையம், பொன்பரப்பிபட்டி, கோம்பைக்காடு உள்ளிட்ட பகுதிகளில், சாமந்திப் பூ அதிக அளவில் பயிரிடப்பட்டுள்ளது. இப்பகுதியில் உள்ள வயல்களில், சாமந்திப் பூக்கள், செடியில் கொத்துக் கொத்தாக பூத்துள்ளது. தற்போது, அறுவடை செய்யும் பணி நடந்து வருகிறது.இது குறித்து, விவசாயி பெருமாள் கூறியதாவது:ஓசூரில் இருந்து சாமந்திப் பூ வேர் வாங்கி வந்து நடவு செய்துள்ளோம். ஒரு ஏக்கருக்கு, நடவு, களை பறித்தல் என,

40 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. நடவு செய்த ஒரு மாதத்தில், பூக்கள் உற்பத்தியாகி, அறுவடை செய்யலாம்.

ஒரு ஏக்கருக்கு, வாரத்தில் இரண்டு நாள் வீதம் தலா, 50 கிலோ பூ வரை உற்பத்தி இருக்கும்.தற்போது, சேலத்தில் ஒரு கிலோ சாமந்திப் பூ, 40 முதல் 60 ரூபாய் வரை விலை கிடைக்கிறது. சாமந்திப் பூ, மூன்று மாதத்தில் குறுகிய காலத்தில் பயன் தரக்கூடிய பயிர் என்பதால், அதை பயிர் செய்துள்ளோம். களை பறித்தல், மருந்து, அறுவடை கூலி ஆகிய பராமரிப்பு செலவு போக, கணிசமான தொகை லாபம் கிடைக்கிறது.இவ்வாறு அவர் கூறினார்.

**விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 13,2012,01:38 IST

கருத்தை பதிவு செய்ய

திருச்செங்கோடு: மரவள்ளிக் கிழங்கு கொள்முதல் விலையை உயர்த்த வலியுறுத்தி, திருச்செங்கோடு பழைய பஸ் ஸ்டாண்ட் அருகே, தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில், ஆர்ப்பாட்டம் நடந்தது.சங்க உதவி தலைவர் ஆதி நாராயணன் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் பெருமாள் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார். ஆர்ப்பாட்டத்தில், தமிழக அரசு, மரவள்ளி கிழங்கு கொள்முதல் விலையை டன்னுக்கு, 9,000 ரூபாயாக உயர்த்தி வழங்க வலியுறுத்தி கோஷம் எழுப்பப்பட்டது.சங்க நிர்வாகிகள், விவசாயிகள் உட்பட பலர் பங்கேற்றனர்.

**கோடை துவங்க உள்ளதால் மாடுகளின் விலை வீழ்ச்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 13,2012,04:21 IST

கருத்தை பதிவு செய்ய

கோபிசெட்டிபாளையம்:கோடை துவக்கம் காரணமாக கோபி மொடச்சூர் மாட்டு சந்தையில் மாடுகளில் விலை வீழ்ச்சியடைய துவங்கி உள்ளது.கோபி மொடச்சூரில் வாரந்தோறும் சனிக்கிழமை மாட்டு சந்தை நடக்கிறது. கோபி, சத்தி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து ஜெர்சி, கொங்கன் மற்றும் எருமை மாட்டில் முரா, நாட்டு கிராஸ் ஆகிய ரகங்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. பல்வேறு பகுதி வியாபாரிகள் மாடு வாங்கி செல்கின்றனர்.தமிழகத்தில் ஏற்பட்டுள்ள கோடை வெயிலால் பல்வேறு பகுதிகளிலும் தீவனத்தட்டுப்பாடு ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மாட்டு தீவனங்களான புண்ணாக்கு, சோளம், கேழ்வரகு, புல் விலைகளும் உயர்ந்து வருகின்றன.

தீவனப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், நிலம் இல்லாமல் வீடுகளில் மாடு வளர்ப்பவர்கள் தீவனம் வாங்க முடியாமல் மாடுகளை விற்க துவங்கி உள்ளனர். நிலங்கள் வைத்துள்ளவர்கள் மட்டும் ஒரு சிலர் தங்கள் மாடுகளை பராமரிக்கின்றனர். கோடை நெருங்குவதால் மாடுகளின் விலை வீழ்ச்சியடைய துவங்கி உள்ளது.சென்ற வாரம் சந்தையில் ஜெர்சி இன மாடு, 40 ஆயிரம் முதல் 45 ஆயிரம் ரூபாய் வரை, கன்று குட்டி பத்தாயிரம் முதல் 20 ஆயிரம் ரூபாய் வரை, இறைச்சி மாடு, பத்தாயிரம் முதல் 15 ஆயிரம் ரூபாய் விற்கப்பட்டது. கலப்பின மாடு, 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் ரூபாய், கன்று குட்டி, 5,000 முதல் பத்தாயிரம் ரூபாய் வரை விற்கப்பட்டது.கொங்கன் இன மாடு, 35 ஆயிரம் முதல் 40 ஆயிரம் ரூபாய் வரை, கன்று குட்டி 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் ரூபாய் வரை, இறைச்சி மாடு 25 ஆயிரம் முதல் 30 ஆயிரம் ரூபாய் வரை, எருமை மாடு 30 ஆயிரம் முதல் 40 ஆயிரம் ரூபாய் வரை விற்கப்பட்டது.சென்ற சில வாரங்களுக்கு முன் மாடுகளில் விலை, 45 ஆயிரம் முதல் 50 ஆயிரம் ரூபாய் வரை விற்கப்பட்டது. சென்ற வாரம் விலை சரிந்தது.

**தர்ப்பூசணி சாகுபடி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 13,2012,03:26 IST

கருத்தை பதிவு செய்ய

லாலாப்பேட்டை: கிருஷ்ணராயபுரம் சுற்று வட்டார பகுதிகளில் பகுதியில் கோடைக்காலத்தை முன்னிட்டு, தர்பூசணி சாகுபடியில் விவசாயிகள் ஈடுப்பட்டு வருகின்றனர்.

கடந்த சில ஆண்டாக கிருஷ்ணராயபுரம் சுற்றியுள்ள கிராமங்களான பழைய ஜெயங்கொண்டம் டவுன் பஞ்சாயத்துக்கு உட்பட்ட புதுப்பட்டி, லட்சுமணப்பட்டி, கருப்பத்தூர் பஞ்சாயத்துக்கு உட்பட்ட வரகூர், குழந்தைப்பட்டி, பஞ்சப்பட்டி, அய்யர்மலை, சிவாயம், சேங்கல் ஆகிய இடங்களில் பரவலாக தர்பூசணி சாகுபடி செய்து வருகின்றனர்.வரும் மாசி மாதம் கோடைக்காலம் தொடங்க உள்ளதால், கிருஷ்ணராயபுரம் பகுதியை சேர்ந்த விவசாயிகள் தர்பூசணி சாகுபடியை தொடங்கியுள்ளனர்.

விவசாயிகள் கூறுகையில்," தர்பூசணி குறுகிய கால பயிராகும். கோடைக்காலத்தில் வருவாயை பெருக்க தர்பூசணியை சாகுபடி செய்துள்ளோம். ஒரு செடியில் 15க்கும் மேற்பட்ட தர்பூசணி பழம் கிடைக்கின்றது. பழம் ஒன்று ஐந்து ரூபாய்க்கு விவசாயிகள் தோட்டத்திலேயே வியாபாரிகள் வந்து கொள்முதல் செய்கின்றனர். இதன் மூலம் குறைந்த நிலத்தில் அதிகமான அளவு லாபம் கிடைத்து வருகிறது' என்றனர்.

**திசுவாழை மரம் ஆய்வு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 12,2012,22:26 IST

வடமதுரை :வடமதுரை பகுதியில், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட மஞ்சள், வெங்காயம், காய்கறி பயிர்களுக்கான துல்லிய பண்ணைய திடல்களை தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

பாகாநத்தத்ததில் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் கீழான திசுவாழை மரங்களையும் ஆய்வு செய்தனர். மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குனர் சந்திரசேகரன் தலைமையில் உதவி இயக்குனர் செல்வராஜ், துணை தோட்டக்கலை அலுவலர் பாண்டியன், உதவி வேளாண் அலுவலர்கள் பழனிச்சாமி, சண்முகம், சுப்பிரமணி, திருக்குமார் ஆகியோர் ஆய்வுபணியை மேற்கொண்டனர்.

**விரிவாக்க மையங்களில் மானிய விலை விதைகள்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 12,2012,22:05 IST

கருத்தை பதிவு செய்ய

தேனி :மாவட்டத்தில் உள்ள விரிவாக்க மையங்களிலும் மானிய விலையில் விதைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

சாகுபடிக்கு தேவையான ஐ.ஆர்., 50, நெல் ஏ.டி.டி., 36, ஏ.டி.டி., 39, கோ- 43, ஏ.டி.டி., 45, மற்றும் கம்பு (ஐ.சி.எம்.பி., 221), மற்றும் துவரை, உளுந்து, பாசிப்பயறு, கே.எம்., 2, கோ-6, கோ- 7, தட்டப்பயறு, பருத்தி, எஸ்.வி.பி.ஆர்., 2, எம்.சி.யு., 12, சுப்ரியா, நிலக்கடலை விதைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

பயறு வகை விதைகளுக்கு கிலோவிற்கு 20 ரூபாய் மானியம், நிலக்கடலை விதைக்கு 12 ரூபாய் மானியம், நெல் விதைக்கு 5 ரூபாய் மானியம், பருத்தி விதைக்கு 25 சதவீத மானியத்திலும் வழங்கப்படுகின்றன.

**பயறுவகை உற்பத்தியை 12,450 டன்னாக அதிகரிக்க விவசாயத்துறை நடவடிக்கை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 12,2012,22:04 IST

கருத்தை பதிவு செய்ய

தேனி :தேனி மாவட்டத்தில் பயறுவகை உற்பத்தியை 12450 டன்னாக அதிகரிக்க விவசாயத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

தேனி மாவட்டத்தில் செப்., அக்., மாதங்களில் மானாவாரியிலும், மார்ச், ஏப்., மாதங்களில் நெல் தரிசிலும், ஜன., பிப்., மே, ஜூன் மாதங்களில் இறவையில் ஊடுபயிராகவும் பயறுவகை சாகுபடி நடந்து வருகிறது.

தனியார் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் உயர் விளைச்சல் தரக்கூடிய பயறு வகை விதைகளை விவசாயிகளுக்கு வழங்கி நெல் தரிசில் பயறு வகைகளை விதைக்க ஊக்கப்படுத்தவும், வாழை, கரும்பு, பருத்தி பயிர்களில் ஊடுபயிராக பயறு வகைகளை விதைக்க விவசாயிகளை ஊக்கப்படுத்தவும் விவசாயத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

தொடக்க கூட்டுறவு வங்கி மூலம் பயிர்க்கடன் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது எக்டேருக்கு 540 கிலோ பயறு வகை விளைவிக்கப்படுகிறது.

இதனை 750 டன்னாக அதிகரித்து மாவட்டத்தில் மொத்த பயறு வகை விளைச்சலை 12450 டன்னாக அதிகரிக்க விவசாயத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதற்காக ஒருங்கிணைந்த உரநிர்வாகம், ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு குறித்து விளக்க செயல்விளக்க திடல்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

---